සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උඌන උපයෝජන රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development

මගේ අංකය எனது இல My No DSD/HO/05/MF/

ඔබේ අංකය உமது இல Your No ..........

දිනය திகதி Date 2020.09.02

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சுற்றறிக்கை இலக்கம் :- 2020/11**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள் / வங்கிச் சங்க முகாமையாளர்கள், சமுதாய அடிப்படை வங்கிச் சங்க நிறைவேற்றுச்சபை / கட்டுப் பாட்டுச் சபை தலைவர்களுக்கு

**சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்க கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு நிதியத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான கடன் ஆலோசனைகள்**

01. நோக்கம் :-

சமுர்த்தி வங்கிகள் / வங்கிச். சங்கங்கள் அதிகமானவற்றுக்கு கட்டிடங்களை நிர்மாணிப்பது அத்தியாவசியமானதாக இருந்தாலும் அதன் பொருட்டு போதுமானளவு நிதியியல் பலம் ஒன்று இல்லை என்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆகையினால் வங்கி / வங்கிச் சங்கத்தின் பொருட்டு கட்டிடம் ஒன்றினை நிர்மாணத்துக்கொள்ள கடன் தொகையினை வழங்குதல் மற்றும் பெற்றுக்கொள்வது தொடர்பில் தேவையான வழிகாட்டல்கள் இதன் மூலம் வழங்கப்படுகின்றது. இக்கடன் தொகையானது ‘கட்டிட நிர்மாண கடன்தொகை’ என அழைக்கப்படுகின்றது.

02. நிதியத்தினை வழங்கும் நிறுவனங்கள்

2.1 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் - சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு சொந்தமான நிதியங்கள்.

2.2 சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவு – குறுநிதிப் பிரிவுக்குச் சொந்தமான நிதியங்கள்.

03. நிதியங்கள் வழங்கப்படும் விதம்

3.1 கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பது கட்டாயமானதாக இருந்தும் அதற்கான நிதியியல் பலம் இல்லாத வங்கிகளுக்கு தனது வங்கிச் சங்கத்தில் போதுமானளவு நிதியங்கள் இருப்பின் கடன் தொகையொன்றினைப் பெற்றுக் கொள்ள முடியும். அக்கடன் தொகையானது சமுர்த்தி வங்கிச் சங்கத்திலிருந்து பெற்றுக் கொண்ட கட்டிட நிர்மானக்கடன் தொகை என அழைக்கப்படுகின்றது.

3.2 மேலே பந்தி இலக்கம் 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வங்கி சங்கத்திற்கு கடன் தொகையொன்றினை வழங்குவதற்கு நிதியியல் பலம் இல்லாதவிடத்து சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவிலிருந்து கடன் தொகையொன்றினை பெற்றுக் கொள்ள முடியும். அக் கடன் தொகையினை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிட நிர்மாணக் கடன் தொகை என அழைக்கப்படுகின்றது.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General — Tel- 011-2871672/2872202; Fax - 011-2889002; E-mail- dg@samurdhi.gov.lk

අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) — 011-2873799; 011-2873996; diradmin@samurdhi.gov.lk; Hot Line :0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant — 011-2869742; 011-2869742; finance@samurdhi.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) — 011-2889003; 011-2887469; Hot Line:0112-885582

කාර්යාලය / அலுவலகம் / Office — 0112872202; Hot Line: 011- 2887722

3.3 சமுர்த்தி வங்கிச் சங்கம் ஒன்றின் பொருட:டு கட்டிடம் ஒன்றினை நிர்மாணித்துக் கொள்வது அத்தியாவசிய விடயமொன்றாக இருந்தும் அதற்குத் தேவையான நிதிப்பலம் இல்லாத வங்கிச் சங்கங்களின் பொருட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவிலிருந்து கடன் தொகையொன்றினை பெற்றுக்கொள்ள முடியும். அக்கடன் தொகையும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட கட்டிட நிர்மாணக் கடன் தொகை என அழைக்கப்படுகின்றது.

04. வழங்கப்படும் கடன் தொகை

4.1 வழங்கப்படும் உச்சபட்ச கடன் தொகையானது ரூபா. 5,000,000/= ஆகும்

4.2 புதிதாக கட்டிடம் ஒன்றினை நிர்மாணிக்கும் போது கட்டிடத்தின் சதுர அடியானது 1200 இற்கும் 1500 இற்கும் இடைப்பட்டதாக உள்ளபோது கடன் தொகையொன்றினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

4.3 கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு மதிப்பிடப்பட்ட பெறுமதியினை அண்மிய, ஆயிரக் கணக்கில் கணக்கீடு செய்து கடன் தொகையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உதாரணமாக :-

ரூபா 2,000,000/=, 2,500,000/= , 3,000,000/=, 3,500,000/=, 4,000,000/=, 4,500,000/=

05. வட்டி வீதம்

5.1 வருடாந்த வட்டியானது 8% மாகும்

5.2 வட்டி அறவிடுவது குறைந்து செல்லும் பெறுமதி முறையிலாயாகும். கடன் தொகை மற்றும் காலத்திற்கேற்ப மாதாந்த கடன் தவணையானது தயாரித்துக் கொள்வதற்காக இணைப்பு 03 இன் அட்டவணையை பயன்படுத்த வேண்டும்.

5.3 கடன் தொகையை அங்கீகரித்து, விடுவிக்கின்ற சந்தர்ப்பத்திலேயே மாதாந்தம் செலுத்த வேண்டிய மாதாந்த தவணைப்பணம் மற்றும் வட்டி (Installment and interest) மாதாந்த தவணைப்பணம் செலுத்தப்படவேண்டிய குறிப்பிட்ட தினத்தினையும் குறிப்பிட்டு குறுநிதிப்பிரிவினால் அல்லது கடன் தொகையினை வழங்கிய வங்கிச் சங்கத்தால் அறிவிக்கப்படும். இதனை கடனை விடுவிக்கும் அறிவித்தல் மூலம் அறிவிக்கப்படல் வேண்டும். (இணைப்பு-04)

5.4 பெற்றுக் கொண்ட கடன் தொகையில் தவணைப்பணம் / தவணைப்பணத்தினை அதாவது கடன் தொகையின் மாதாந்த தவணைப்பணம் மற்றும் வட்டியை வங்கிச் சங்கத்திற்கோ அல்லது திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவிற்கோ குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் வழங்கப்பட வேண்டும் அங்கு தவணைப்பணம் அல்லது வட்டி எத்தகைய குறைப்பாடுமின்றி செலுத்தப்படல் வேண்டும்.

5.5 கடன் தவணைப்பணம் மற்றும் வட்டியினை செலுத்த வேண்டிய குறிப்பிட்ட தினத்தில் அல்லது 15 நாட்களுக்குள் திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவுக்கு அல்லது கடனைப் பெற்றுக்கொண்ட வங்கிச் சங்கத்திற்கு செலுத்தத் தவறினால் மாதாந்த கடன் தவணைப்பணத்திற்கு (Installment) 5% தண்டத்தொகை அறவிடப்படும். அவ்வாறு காசோலை ஒன்று வரையப்பட்டவரால் கொடுப்பனவு இடைநிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் கட்டணம் ஒன்றாக அறவிடப்படும் தொகை கடனைப் பெற்றுக் கொண்டவரால் குறுநிதிப் பிரிவுக்கு அல்லது வங்கிச் சங்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

06. கடனை மீளச் செலுத்தும் காலம்

6.1 கடன் தொகையினை மீளச் செலுத்தும் காலமானது உயர்ந்தபட்சம் 60 மாதங்களாகும்.

6.2 கடனை மீளச் செலுத்த வேண்டிய காலம் கடன் தொகை விடுவிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்படும்.

6.3 வங்கிச் சங்கத்திலிருந்து பெற்றுக் கொண்ட கடன் தொகை, வங்கிச் சங்கத்திற்கே செலுத்துதல் வேண்டும்.

6.4 சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதி – பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட கடன் தொகையின் மாதாந்த தவணைப்பணத்தை சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கம் நேரடியாக குறுநிதிப் பிரிவிற்கு அனுப்புதல் வேண்டும்.

07. கடன் தொகையினை விண்ணப்பிப்பதும் கடன் தொகையினை விடுவிப்பதும்.

7.1 கட்டிடத்தினை நிர்மாணிக்கும் பொருட்டு குறுநிதிப் பிரிவிலிருந்து அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர், தயாரித்த கட்டிட மதிப்பீட்டு தொகையினை செலவிட சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கத்தில் நிதியங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் சமுர்த்தி வங்கியாயின் முதலில் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் ஊடாக கடன் தொகையினை கோருதல் வேண்டும். வங்கிச் சங்கத்தில் போதுமானளவு நிதியம் இல்லையென அறிவிக்கும் பட்சத்தில் அடுத்த கட்டமாக குறுநிதிப் பிரிவிலிருந்து கடன் தொகையினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இருப்பினும் வங்கிச் சங்கமாயின் நேரடியாக குறுநிதிப் பிரிவிலிருந்து கடன் தொகையினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

7.2 கடன் தொகையினைப் பெற்றுக் கொள்ளல், மற்றும் தேவைப்படும் தொகை தொடர்பில் அறிக்கையொன்றினைத் தயாரித்து முதலில் கட்டுப்பாட்டுச் சபை / நிறைவேற்றுக் குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

7.3 கட்டுப்பாட்டுச் சபை / நிறைவேற்றுக் குழு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சமுர்த்தி வங்கியால் கடன் கோரிக்கையினை வங்கிச் சங்கத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். வங்கிச் சங்கம் ஒன்றாயின் குறுநிதிப் பிரிவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பொருட்டு 01ம் இணைப்பின் கடன் விண்ணப்பப்படிவத்தினை பயன்படுத்துதல் வேண்டும். இங்கு முழுமையான மதிப்பீடு தொகையினை ஒரே இடத்திலிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

7.4 சமுர்த்தி வங்கியொன்று கடன் தொகையினை கோரியுள்ள சந்தர்ப்பத்தில், வங்கிச் சங்க முகாமையாளரால் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திற்கு கீழுள்ள ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

I. கடன் விண்ணப்பப்படிவம்,
II. வங்கியிலுள்ள நிதியங்களின் நிலை,
III. கடந்த, அண்மிய 03 வருடங்களில் இலாப - நட்ட நிலைகள்,
IV. வங்கிச் சங்கத்திற்கு சொந்தமான மேலதிக நிதியங்களின் அளவு ரூபா,
V. குறுநிதிப் பிரவால், கட்டிடம் அங்கீகரிக்கப்பட்டமைக்கான கடிதம்,

7.5 மேலே பந்தி இலக்கம் 7.04 இன் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றுக் குழுவினால் கடன் தொகையினை அங்கீகரித்தல் அல்லது அங்கீகரிக்காமல் இருத்தல். அதன் பின்னர் அத்தீர்மானத்தை சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

7.6 வங்கிச் சங்க கடன் தொகை அங்கீகரிக்கப்படுமிடத்து இணைப்பு 02, ஒப்பந்தப் பிரதிகள் 02 ஆகியவற்றினைத் தயாரித்து உரிய பிரிவினரால் கையொப்பமிட்டு பிரதேச செயலளாரின் உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

7.7 வங்கிச் சங்கத்தால் சமுர்த்தி வங்கிக்கு கடன் விடுவித்தல்.

7.7.1 வங்கிக கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு சமுர்த்தி
வங்கிக்கு வழங்கிய கடன் கணக்கு - பற்று (குறியீட்டு இலக்கம் 7409)
நடைமுறைக் கணக்கு - வரவு

கடன் தொகையினை விடுவித்தவுடன், இணைப்பு 05 இன் பொருட்டு கடன் கட்டுப்பாட்டுப் பேரேட்டின் தகவல்களையும் பெறுமதிகளையும் காட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

7.7.2 காசோலையுடன் இணைப்பு 04 ன் திருத்தங்களுடன் தயாரித்துக் கொள்ளப்பட்ட படிவத்தினை பூர்த்தி செய்து, கடனை விடுவிக்கும் அறிவித்தலை பூர்த்தி செய்து

சமுர்த்தி வங்கிக்கு வழங்குதல் வேண்டும். அதன் பின்னர் காசோலை கிடைத்ததன் உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

7.8 சமுர்த்தி வங்கிக்கு கடன் தொகைக்குறிய காசோலை கிடைத்ததன் பின்னர், காசோலையினை வங்கியிலிட்டு, தேறியதன் பின்னர் கீழ்வரும் சாட்டுதல்களை இடுதல் வேண்டும்.

வாடிக்கையாளர் வைப்புச் செய்த காசோலைக் கணக்கு - பற்று
வங்கிக் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு பெற்றுக் கொண்ட - பற்று
நிதியக் கடன் கணக்கு - வரவு

இப்புதிய கணக்கானது பொதுப் பேரேட்டின் குறியீட்டு இலக்கம் 3320 இன் கீழ் ஆரம்பிக்கப்பட்டு பதியப்படல் வேண்டும். அத்துடன் இணைப்பு 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிச் சங்கத்திலிருந்து பெற்றுக் கொண்ட கட்டிட நிர்மாணப் பேரேட்டில் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

7.9 சமுர்த்தி வங்கி சங்கத்தால் கடன் தொகையினை வழங்க முடியாது என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில் சமுர்த்தி வங்கியானது குறுநிதிப் பிரிவிலிருந்து கடன் தொகையினை விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

7.10 சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கத்தால் குறுநிதிப் பிரிவில் கடன் தொகையினைக் கோருதல்.

7.10.01 இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்து கட்டுப்பாட்டுச் சபை / நிறைவேற்றக் குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

7.10.02 அதன் பின்னர் கடன் விண்ணப்பப்படிவத்தை குறுநிதிப்பிரிவிற்கு கீழுள்ள ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. ஒப்பந்தப் படிவம் (இணைப்பு 02)
II. குறுநிதிப் பிரிவால் கட்டிட நிர்மாணத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்று.

7.11 குறுநிதிப் பிரிவு கடன் தொகையினை அங்கீகரித்து சமுர்த்தி வங்கிக்கு / வங்கிச் சங்கத்திற்கு வழங்குதல்

7.11.1 கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டு காசோலை சமுர்த்தி வங்கிக்கு கிடைத்தன் பின்னர் வங்கியிலிருந்துத் தேறியதன் பின்னர் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல்.

வாடிக்கையாளர் வைப்புச் செய்த காசோலைக் கணக்கு – பற்று
வங்கிக் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு பெற்றுக்
கொண்ட நிதியக் கடன் கணக்கு – வரவு (குறியீட்டு இலக்கம் 3320)

அதே நேரத்தில் இணைப்பு 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு பெற்றுக் கொண்ட நிதியக் கடன் பேரேட்டில் பதிதல் வேண்டும்.

7.11.2 குறுநிதி பிரிவால், கடடன் தொகைக்குறிய காசோலை வங்கிச் சங்கத்திற்கு கிடைத்ததன் பின்னர், வங்கியிலிட்டு தேறியதன் பின்னர் கீழுள்ள பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

வாடிக்கையாளர் வைப்புச் செய்த காசோலைக் கணக்கு – பற்று
வங்கிக் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு குறுநிதிப் பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட நிதியக் கடன்கணக்கு – வரவு (குறியீட்டு இலக்கம் 9313)

7.11.3 அதேநேரம் இணைப்பு 06 வங்கிக் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு பெற்றுக்கொண்ட நிதியக் கடன் பேரேட்டினை தயாரித்துப் பதிதல் வேண்டும்.

08. கடன் தவணைப்பணம், வட்டியினை செலுத்துதல் மற்றும் கணக்குகளில் இடல்

8.1 சமுர்த்தி வங்கி, வங்கிச் சங்கத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகையின் தவணைப் பணத்தினை செலுத்துதல்.

வங்கிக் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு
பெற்றுக் கொண்ட நிதியக் கடன் கணக்கு – பற்று (குறியிட்டு இலக்கம் 3320)
செலுத்திய வட்டி – வங்கிக் கட்டிட நிர்மாணத்தின்
பொருட்டு பெற்றுக் கொண்ட நிதியக்கடன் கணக்கு – பற்று (குறியீட்டு இலக்கம் 2143)

நடைமுறைக் கணக்கு - வரவு
அதேநேரம் இணைப்பு 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு பெற்ற நிதியத்தினை கடன் பேரேட்டில் பதிந்து இணைப்பு 07 இல் அறிவித்தலுடன் காசோலையினை கையில் கொண்டுவந்து அல்லது பதிவுத் தபாலில் வங்கிச் சங்கத்திற்கு சமரப்பிக்கப்படல் வேண்டும்.

8.2 மாதாந்த கடன் தவணைப்பணம் வங்கிச் சங்கத்திற்கு கிடைத்ததன் பின்னர் வங்கியிலிட்டு தேறியதன் பின்னர் கீழுள்ள பிரகாரம் பொதுப் பேரேட்டில் பதிவினை மேற்கொள்ளல் வேண்டும்.

வாடிக்கையாளர்கள் வைப்புச் செய்த காசோலைக் கணக்கு – பற்று
வங்கிக் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு
சமுர்த்தி வங்கிக்கு வழங்கிய கடன் கணக்கு – வரவு (கடன் தொகையின் தவணைப் பணம்)
கிடைத்த வருமானம், விஸேட கருத்திட்ட உழைப்புக் கணக்கு – வரவு (வட்டித்தொகை) (குறியீட்டு இலக்கம 5103)

அதன் பின்னர் இணைப்பு 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் கட்டுப்பாட்டுப் பேரேட்டில் பதிதல் வேண்டும். பல சமுர்த்தி வங்கிகளுக்கு கடன் தொகை வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்தந்த வங்கியின் பெயரில் தனித்தனியாக பேரேடுகளை பராமரித்தல் வேண்டும்.

8.3 குறுநிதி பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையின் மாதாந்தக் கடன் தவணைப்பணத்தினையும் வட்டியினையும் வழங்குதல்.

8.3.1 சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடக் கடனை செலுத்துல் என்று எழுதி கடனை விடுவிக்கும் அறிவித்தலைக் குறிப்பிட்டு நடைமுறைக் கணக்கில் வரவிடுகின்ற பிரகாரம் காசோலையினை தயார்செய்து, இணைப்பு 08 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலுடன் பதிவுத் தபாலில் குறுநிதிப் பிரிவிற்கு அனுப்புதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**<u>சமுர்த்தி வங்கி</u>**

வங்கிக்கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு பெற்றுக் கொண்ட நிதியக் கடன் கணக்கு – பற்று (கடன் தவணைப் பணம்)
செலுத்திய வட்டி – வங்கிக் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு
பெற்றுக் கொண்டட நிதியக் கடன் கணக்கு – பற்று (கடன் வட்டி)
நடைமுறைக் கணக்கு – வரவு

அதேநேரம் இணைப்பு 06 இல் குறிப்பிடப்படும் கடன் கட்டுப்பாட்டுப் பேரேட்டில் மாதாந்த கடன் தவணைப்பணம், மற்றும வட்டி என்பன செலுத்தப்பட்டதாக பதியப்படல் வேண்டும்.

**<u>சமுர்த்தி வங்கிச் சங்கம்</u>**

வங்கிக் கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு குறுநிதிக் பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட நிதியக் கடன் கணக்கு – பற்று (குறியீட்டு இலக்கம் 6105)

செலுத்திய வட்டி – வங்கிச் சங்க கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு குறுநிதிப் பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட நிதியக் கணக்கு - பற்று (குறியீட்டு இலக்கம் 6105)

நடைமுறைக் கணக்கு - வரவு
அதன் பின்னர் இணைப்பு இன் பொருட்டு கடன் கட்டுப்பாட்டு பேரேட்டில் கடன் தவணைப்பணம் செலுத்துவதனைப் பதிதல் வேண்டும்.

8.4 குறுநிதிப் பிரிவிலிருந்து / வங்கிச் சங்கத்தின் மூலம் பெற்றுக் கொண்ட கடன்தொகையொன்றின் மாதாந்த தவணைக் கடன் தொகையினை வழங்கிய திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும். அது தொடர்பான தகவல்கள் கடன் தொகை விடுவிக்கப்பட்ட அறிவித்தல் இணைப்பு இலக்கம் 04 இல் உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 5% தண்ட வட்டியினை செலுத்திய வட்டி – கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு பெற்றுக் கொண்ட நிதியக் கடன் கணக்கில் பதிதல் வேண்டும்.

09. கடன் வழங்கப்படும் பணிகள்

இக்கடன் வேலைத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும் விடயங்கள் கீழுள்ளவாறாகும்.

9.1 புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணித்தல்.
9.2 புதிய கட்டிடம் ஒன்றில் கீழ் மாடியினை நிர்மாணித்தல்
9.3 ஏலவே கீழ்மாடி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் முதலாம் மாடியினை நிர்மாணித்தல்.
9.4 தற்போதுள்ள கட்டிடத்தினை நவீனமயப்படுத்துதல்.
9.5 நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கட்டிடத்தின் பணிகளை பூர்த்தி செய்தல்.
9.6 பாதுகாப்பு வேலிகள் உட்பட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

10. கடனைப் பெற்றுக் கொள்ளத் தேவையான தகுதிகளும் தேவைப்பாடுகளும்

10.1 நிதி மற்றும் ஏனைய நிலைகள்.

10.1.1 குறித்த வங்கி / வங்கிச் சங்கம் செயற்பாடுள்ளதாக தாபிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10.1.2 சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பத்துவருடங்களை விடக்கூடிய காலம் செயற்படுதல்.

10.1.3 வங்கி / வங்கிச் சங்கத்தால் பொதுப்பேரேட்டின் பரீட்சை மீதிகள் மற்றும் ஆள்சார் பரீட்சைமீதிகள் சமப்பட்டிருத்தல் வேண்டும்.

10.1.4 நட்டகரமான நிலை காணப்பட்டாலும், வருடாந்த இழப்பீட்டின் வீதமானது குறைந்து செல்லும் போக்குகள் கடந்த 03 வருடத்திற்குள் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

10.1.5 வங்கி / வங்கிச் சங்கம் நட்டமடைந்திருந்தாலும் சிறந்த நிதி முகாமைத்துவம் உள்ளதாக மாவட்ட கணக்காய்வுப் பிரிவால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

11. சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கத்தின் பொருட்டு புதிய கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளும் போது மாத்திரம் இந்த விடயங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

புதிய கட்டிடம் ஒன்றினை நிர்மாணிக்கும் பொருட்டான தேவையினைக் குறிப்பிட்டு முன்மொழிவொன்றினை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். (Proposal)

* முகாமையாளரால் சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கத்தின் பொருட்டு புதிய கட்டிடம் ஒன்றினை நிர்மாணிக்கும் தேவைப்பாட்டினை நியாயப்படுத்துதல்.
* வங்கிக் கட்டுப்பாட்டுச் சபையின் / நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் இருத்தல் வேண்டும்.
* மாவட்டப் பொறியியலாளர் தற்போதுள்ள கட்டிடம் வங்கி நடவடிக்கைகளின் பொருட்டு பாதுகாப்பானது அல்ல என்பதனை உறுதிப்படுத்திய கடிதம்.
* கட்டிடம் நிர்மாணிக்கப்படும் நிலத்தினை ஒப்படைக்கும் ஆவணம் / உரித்தினை உறுதிப்படுத்தும் ஆவணத்தை சமர்ப்பித்தல்.
* சமுர்த்தி வங்கியொன்றினை நிர்மாணிக்கும் போதாயின் வங்கிச் சங்க முகாமையாளரும் வங்கிச் சங்கம் ஒன்றாயின் தலைமையக முகாமையாளரின் உறுதிப்பாடும்.

* பிரதேச செயலாளரின் சிபாரிசு
* மாவட்டச் செயலாளர் / மாவட்ட மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி / மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரின் இணைக்கப்பாட்டுடன் சமர்ப்பித்தல்.

12. சமுர்த்தி வங்கி அல்லது வங்கிச் சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு திணைக்களத்தினால் அங்கீகரித்ததன் பின்னர் அதற்குப் பின்னர் நிர்மாணிக்கப்படும் கட்டிடத்தின் பொருட்டு அங்கீகாரத்தனை வழங்குவதற்கு கீழ்குறிப்பிடப்படும் ஆவணங்களை அனுப்புதல் வேண்டும்.

    I. வெள்ளப் பெருக்கு அல்லது மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசம் ஒன்றில் கட்டிடத்தை நிர்மாணிக்கின்ற நிலத்தினை நிலச்சரிதவியல் பணியகத்தின் மூலம் கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு பொருத்தமானது என சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
    II. வீதி வரைபடம், சுவீகரிக்காமை சான்றிதழே உள்ளூராட்சி மன்றத்திலிருந்து பெற்றுக்கொள்ளல்.
    III. பயங்கரவாத நடவடிக்கைகளுக்குள்ளான பிரதேசம் ஒன்றாயின் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யப்பட்ட பிரதேசம் ஒன்று என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
    IV. புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்படுகின்ற நிலத்தின் வரைபடத்தினை உள்ளூராட்சி மன்றத்திலிருந்து அங்கீகரித்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.
    V. புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்படுவது பழைய கட்டிடம் இருந்த இடத்திலாயின், பழைய கட்டிடத்தினை அகற்றுவதற்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சிபாரிசுடன் மாவட்ட பொறியியலாளரின் சிபாரிசினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
    VI. கட்டிட நிர்மாண மதிப்பீட்டினை மாவட்ட பொறியியலாளர் சிபாரிசு செய்து மாவட்டச் செயலாளர் / மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் அங்கீகரித்தல் வேண்டும்.
    VII. கட்டிட நிர்மாணத்தின் பொருட்டு பிற நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அங்கீகாரங்கள் இதற்கு மேலதிகமாகப் பெற்றுக் கொள்ளத் தேவைப்படின் அவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆர்.பீ.பி. திலக்கசிறி
பணிப்பாளர் தலைமையதிபதி

**பிரதிகள்**

1. செயலாளர் - சமுர்த்தி மனைப்பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் குறைப்பயன்பாட்டு அரசவளங்கள் அபிவிருத்தி அமைச்சு - த.கூ.க. பொருட்டு
2. மாவட்ட செயலாளர் / மேலதிக பணிப்பாளர் தலைமைதிபதி, மாவட்டச் செயலகம் - த.கூ.க. பொருட்டு
3. மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் மாவட்டச் செயலகம் - த.கூ.க. பொருட்டும் உ.ந பொருட்டும்
4. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
5. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - - த.கூ.க. பொருட்டு
6. பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் - த.கூ.க. பொருட்டு
7. மாவட்ட - பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் மாவட்டச் செயலகம் -- த.கூ.க. பொருட்டு